பழையகோட்டை

# கால்நடைப்பண்ணை



[illegible]

ஜெம்பகுளம் திருச்சிராப்பள்ளி

# பழய கோட்டை

# கால் நடைப் பண்ணை

[படங்களுடன்]

ஆசிரியர்
டி. எம். முத்து

பயோனீர் பப்ளிஷர்ஸ்
கிளைவ்ஸ் ஹவுஸ்
தெப்பக்குளம் : : திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை] [விலை அணா 6

முதல் பதிப்பு 1950

பயோனீர் பிரிண்டிங் ஒர்க்ஸ், திருச்சி.

திருச்சிராப்பள்ளி ஜில்லா போர்டு உயர்நிலைப்பள்ளி
தலைமைத் தமிழாசிரியர்

**உயர்திரு. புலவர் அ. நடேச முதலியார் அவர்களின்**

## அணிந்துரை.

நம் இந்திய நாடு விவசாய நாடு. நம்மிற் பெரும்பாலோர் விவசாயத் தொழிலாளர் ; சிறுபான்மையோர் கைத்தொழிலும், தொழிலின்றியும், வாழ்பவர்கள். நம் நாட்டின் உரிமையைப் பாதுகாக்கும் பல திட்டங்களில் நமக்குவேண்டிய பொருளை நாமே உண்டாக்கிக்கொள்வது முதன்மையான திட்டம். அத்திட்டங்களுள் முதன்மையானது உணவுத் திட்டம். அத்திட்டத்தை நிறைவேற்றிவைப்பது விவசாய உயிர்த் தொழில். அத்தொழிலுக்கு இன்றியமையாது வேண்டப்படுவது, கால்நடைப்பண்ணை. கால்நடைப் பண்ணையைப்பற்றி எளிய நடையில், சிறந்த முறையில், சுருங்கிய அளவில் இந்தச் சிறு நூல் எழுதப்பட்டிருக்கிறது.

தமிழ் நாட்டுக்கு எத்தனையோ பழைய பெருமைகள் உண்டு. அவற்றைப் பழைய இலக்கியங்கள் கூறுகின்றன ; சிற்பங்கள் காட்டுகின்றன. இதுபோது, நம் நாட்டாரும் பிற நாட்டாருங்கூடப் பாராட்டும்படி அமைந்திருப்பது **பழயகோட்டை பட்டக்காரர் கால் நடைப் பண்ணை.** அதனை, எப்படி அமைத்து எப்படி நடத்தி எப்படி வளர்க்கிறார்கள் என்ற முறையினை வேண்டிய அளவில் இந்தச் சிறுநூல் நன்றாக விளக்கம் செய்கிறது.

உழவுத் தொழிலின் சிறப்பினை மாணவர் இளமையிலேயே உணரவேண்டும். கல்வி உத்யோகப்பற்றையே உண்டாக்குகிறது. அதனை விட்டுத் தொழிலில் ஊக்கமும், உழவுத்தொழிலில் பற்றும் உண்டாக மாணவர்க்கு உறுதுணைவேண்டும். தொழிலுக்குச் சாதனம் கால்நடைகளே. நம்நாட்டில் தொழிலுக்குவேண்டிய கால்நடைகள்

குறைவு. அந்தக் குறைவான கால்நடைகளும், போதிய போஷாக்கு இன்றி, ஒட்டிய வயிறும், ஒடுங்கிய உடலும் உடையனவாய் உள்ளன. உழைப்புக்கு வேண்டிய உடல் உரம்வேண்டும். எப்படிக் கால்நடைகளை வளர்க்கவேண்டும் என்ற முறையினை அன்பர், டி. எம். முத்து அவர்கள், திறம்பட விளக்கிச் சிறுவர்க்கு ஏற்ற முறையில் எழுதியிருக்கிறார்கள். ஆதலால் இந்தச் சிறு நூல் இளமையிலேயே மாணவர்க்கு உழவுத்தொழிலில் பற்றினையும் பயிற்சியினையும்கூட அளிக்கும் என்று கூறலாம்.

இளமையில் மாணவர்க்கு நான்கு ஐந்து வகுப்புக்களில் துணைப்பாடங்கள் பெரும்பாலும் கதைகளாகவே உள்ளன. அவை, மாணவர்கள் விரும்பிப் படிக்கத் துணை செய்யும் என்பதில் குறையில்லை. ஆனால், இதுபோன்ற நூல்கள் மாணவர்க்கு, நாட்டின் உண்மை நிலையினையும், தொழிலில் பற்றையும் உண்டாக்கி, உண்மையான அடிப்படைக் கல்வியின் நோக்கத்தை எளிதில் கைகூடச்செய்யும். ஆகையால், பள்ளிக்கூட இளம் மாணவர்க்கென்றே எழுதிய இந்நூல் நம் நாட்டு எல்லா மாணவர்களும் படித்துப் பயன்பெறவேண்டும் என்பது என் பேரவா.

லாலுகுடி,
7—11—50.

அ. நடேச முதலியார்.

சென்னை கார்ப்பரேஷன் முன்னாள் மேயரும் சர்க்கார்
விவசாயக் கல்லூரி பிரின்சிபாலுமான

**திவான்பகதூர் C. தாதுலிங்க முதலியார் அவர்கள்**

## சிறப்புரை

"…..இப்பண்ணையை நான் நேரில் பார்த்திருக்கிறேன். பல தலைமுறைகளாய் பட்டக்காரர் குடும்பம் இதனை நடத்திவருகிறது. ராய்பகதூர் நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார் அவர்களை சுமார் 35 வருடங்களாய் எனக்குத் தெரியும். இவரது காலத்தில்தான் இப் பண்ணை உலகப்பிரசித்திபெற்றது. இந்தியாவிலுள்ள கால்நடைப்பண்ணைகளில் இது மிக முக்கியமானதும் சிறப்புவாய்ந்ததுமாகும். தென்னிந்தியாவில் இத்தகைய பண்ணை வேறெங்கும் கிடையாது.

திரு. டி. எம். முத்து அவர்கள் மூன்று அத்தியாயங்களாகப் பிரித்து சிறுவர்களுக்கு எளிதில் விளங்கும்படி விபரமாய் எழுதியிருக்கிறார். இதற்காக நான் அவரை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

கல்வி அதிகாரிகளும், பாடசாலை நிர்வாகிகளும் இதை முக்கிய துணைப்பாடமாக ஏற்று சிறுவர் உலகம் பயன்பெறச் செய்யுமாறு விரும்புகிறேன்….."

**சி. தாதுலிங்கம்,**
Rtd. Principal,
Govt. Agricultural College, Coimbatore.

# பொருள் அடக்கம்


I. முன்னுரை

1. கால் நடைச்செல்வம்
2. தமிழ் நாட்டுக் கால் நடைகளின் நிலை
3. கால் நடைப் பண்ணை


II. பழைய கோட்டை பட்டக்காரர் வரலாறு

1. பட்டக்காரர் பரம்பரை
2. ராய் பகதூர் நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார்

III. கால் நடைப் பண்ணை

1. நோக்கமும் வசதியும்
2. மேய்ச்சல் நிலம்
3. மேய்க்கும் முறை
4. கால் நடைகள்
5. காங்கேயம் மாடுகள்
6. மாட்டுத் தீவனம்
7. மாடுகளைப் பழக்குதல்
8. கால் நடைகளின் சிறப்பு
9. பண்ணையின் சிறப்பு

முடிவுரை



# பழயகோட்டை
# கால் நடைப் பண்ணை
## முன்னுரை

### 1. கால்நடைச் செல்வம்

நமது நாடு இந்தியா. இந்தியாவில் கிரா மங்கள் அதிகம். இந்திய மக்கள் முப்பது கோடிக்கு மேலானவர்கள். இவர்களில் பெரும் பாலோர் கிராமவாசிகள். இவர்கள் பயிர்த் தொழிலேயே முக்கியத் தொழிலாகக் கொண்டு வாழ்கிருர்கள். பயிர்த்தொழிலே விவசாயம் என்

றும், பயிர்த் தொழில் செய்வோரை **விவசாயிகள்** என்றும் சொல்லுவார்கள்.

உணவு இல்லாமல் எவரும் உயிர்வாழ முடியாதல்லவா? உணவுக்கு வேண்டிய தானியங்கள் நெல், கம்பு, கேழ்வரகு, சோளம், கோதுமை முதலியவை. இவை, பயிர்த்தொழில் செய்வதால்தான் கிடைக்கின்றன. ஆகையால், பயிர்த் தொழில் இந்தியாவின் உயிர் நாடியாக விளங்குகிறது என்று சொல்லலாம். இத்தகைய பயிர்த் தொழில் இந்தியாவில் அதிகமாயிருப்பதால், இந்தியாவை **விவசாய நாடு** என்று சொல்லுவார்கள்.

பயிர்த்தொழில் நடைபெறுவதற்கு ஏர், மண்வெட்டி, பரம்பு முதலிய கருவிகள் வேண்டும். ஏரில் பூட்டி உழுவதற்கு மாடுகள் வேண்டும். மாடுகள், விவசாயிகளின் உழைப்பில் சமபங்கு கொள்ளுகின்றன. உழுதல், பரம்படித்தல், நீர் இறைத்தல், பாரம் இழுத்தல் முதலிய பல தொழில்களில், மாடுகள் விவசாயிகளின் தோழனாக நின்று உழைக்கின்றன. ஆகையால், நம் நாட்டில் மாடுகள் இல்லாமல் பயிர்த்தொழில் நடைபெறாது.

நகரங்களில் வாழ்வோர், வீடுகள், ஆபரணங்கள் முதலியவற்றைச் செல்வங்களாக மதிக்கிறார்கள். ஆனால், கிராமங்களில் வாழ்வோர்

நிலபுலங்களுக்கு அடுத்தபடி மாடுகள் ஆடுகள் ஆகிய கால் நடைகளையே தமது செல்வங்களாக மதிக்கிறார்கள். ஒருவரிடத்தில் அதிகமான ஆடு மாடுகள் இருக்குமானால் அவரே பெருஞ்செல்வர் என்று நாட்டுப்புறங்களில் மதிக்கப்படுகிறார். இதற்குக் காரணம் என்ன? மாடுகள் பயிர்த் தொழிலுக்கு மிக அவசியம் என்பதுதான். அதிக மாடுகள் வைத்திருப்போர் அதிக நில புலங்களை உடையவராய் இருக்கவேண்டுமல்லவா?

விவசாயிகளுக்கு நிலபுலங்களை உயிர் என்று சொல்லலாம். அவ்வாறே மாடுகளை அவர்களுக்குக் கண்கள் என்று சொல்லலாம். ஒவ்வொரு சிறிய விவசாயியும் தன்னுடைய கால் நடைச் செல்வத்தைக் கண்போல் கருதிக் காப்பாற்றுவதைக் கிராமங்களில் பார்க்கலாம்; பெரிய விவசாயிகள் தொழுவம் அமைத்து மாடுகளைப் போற்றி வளர்ப்பதையும் பார்க்கலாம். விவசாயிகள் மாட்டினிடத்தில் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார்கள் என்பதை, மாட்டுப் பொங்கல் நாளில் நாம் நன்றாய் அறிந்திருக்கிறோமல்லவா?

## 2. தமிழ்நாட்டுக் கால்நடைகளின் நிலை

நாம் வாழும் நாடு தமிழ் நாடு. இந்தத் தமிழ் நாட்டில் காவிரி, வைகை, பொருனை,

பெண்ணை, பாலாறு முதலிய பல ஆறுகள் ஓடுகின்றன. அதனால் இந் நாட்டில் நீர் வளப்பமும் நிலவளப்பமும் அதிகம்.

பல நூறு ஆண்டுகளுக்குமுன் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தமிழ்நாட்டை அரசாண்டு வந்தார்கள். இவர்கள் காலத்தில் தமிழகம் சீரும் சிறப்பும் பொருந்தியிருந்தது; மக்கள் பசிப்பிணியின்றி மகிழ்வுடன் வாழ்ந்து வந்தார்கள். வீரர்கள் போர்செய்து வெற்றி பெற்றுக் களித்தார்கள். இவற்றிற்கெல்லாம் காரணம், பயிர்த்தொழில் செழித்திருந்ததேயாகும்.

கரிகாலன் என்னும் சோழ அரசன், காவிரியாற்றுக்கு இருபுறத்திலும் கரை அமைத்தான். இதனால், வெள்ளப்பெருக்கில் ஊர்களும் பயிர்களும் அழியாமல் காக்கப்பட்டன; எல்லா வயல்களிலும் தேவையான நீர் பாய்ந்து பயிர்த்தொழில் நன்றாய் நடைபெற்றது. இவ்வாறு விவசாயம் செழித்து வளம்பெருகச் செய்ததால், இவ்வரசனைக் கரிகாற் பெருவளத்தான் என்று, மக்கள் போற்றினார்கள். இச் சோழனைப் போலவே சேர அரசரும், பாண்டிய அரசரும் பயிர்த்தொழில் செழிக்கப் பல ஏற்பாடுகள் செய்தார்கள். அதனால் தமிழ்நாடு நெற்களஞ்சியமாகச் சிறப்புடன் விளங்கியது.

இத்தகைய தமிழ் நாட்டில் கால் நடைகள் ஏராளம் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? வளப்பம் மிகுந்த பழந்தமிழ் நாட்டில் கொழுத்த எருதுகள் மிகுதியாக இருந்திருக்கவேண்டும். ஆனால், பிற்காலத்தில் தமிழ்நாட்டின் நிலை மாறியது. இதற்குக் காரணங்கள் ஆட்சி மாறுபட்டது; பழக்க வழக்கங்கள் வேறுபட்டன; மக்கள் வாழ்க்கை நிலை குறைந்தது முதலியவைகளாம்.

இக் காலத்தில் கிராமங்களுக்குச் சென்று பார்ப்போர், கால்நடைகள் எந்நிலையில் இருக்கின்றன என்பதை எளிதில் அறிவார்கள். எலும்பு தெரியும்படி இளைத்துப்போன நோஞ்சல் எருதுகளே கிராமங்களில் பெரும்பாலும் இருக்கின்றன. இவைகளை ஏரில் பூட்டி வயல்களில் உழும் வயிறொட்டிய ஏழை விவசாயிகளைக் காணலாம். தன் வாழ்க்கைக்குப் போதுமான உணவில்லாத விவசாயி, மாடுகளை எவ்வாறு காப்பாற்ற முடியும்? இந்த நிலையில் விவசாயிகளும், மாடுகளும், எலும்பும் தோலுமாய்க் காணப்படுவதில் ஆச்சரியம் இல்லையல்லவா? இத்தகைய விவசாயிகளாலும் மாடுகளாலும் பயிர்த் தொழில் நல்ல முறையில் நடைபெறுமோ? நடைபெறாது.

### 3. கால்நடைப் பண்ணை

விவசாயம் செழிக்கவேண்டுமானால், விவசாயிகளின் நிலை உயரவேண்டும்; கால்நடைகள்

வளத்துடன் பெருகவேண்டும். கால் நடைகள், பெருகினல்தான் பயிர்த்தொழில் சிறப்படைந்து உணவுப்பொருள்கள் பெருகும்; பஞ்சம் நீங்கும். ஆகையால், கால்நடைகளைப் போற்றி முறையுடன் வளர்க்கும் பண்ணைகள் தமிழ் நாடெங்கும் ஏற்படவேண்டும்.

கால்நடைப் பண்ணைகள் ஏற்படுத்துவது என்பது எளிதான காரியமன்று. கால்நடைகளைப்பற்றிய நுட்பங்கள் தெரிந்திருக்கவேண்டும்; வளர்க்கும் முறை, நோய்வராமல் பாதுகாக்கும் முறை, நோய்வந்தால் தணிக்கும் வகை, தீனி வகை, நடத்தும்வகை முதலியவை தெரிந்திருக்க வேண்டும். மேய்ச்சல் காடு, நீர்வசதி முதலியவை பொருந்தியிருக்கவேண்டும். செல்வச் சிறப்பும், மாடு வளர்ப்பில் ஆர்வமும் மிகுந்திருக்கவேண்டும். இத்தகையவர்களே கால் நடைப் பண்ணை வைத்து வெற்றியடைய முடியும்.

தமிழ் நாட்டில் பெருஞ் செல்வர்கள் கால் நடைகளை வளர்க்கிருர்கள். ஆனல், இவர்கள் தங்கள் நிலபுலங்களில் பயிர் செய்வதற்குத் தேவையான மாடுகளையே வைத்திருக்கிருர்கள். இவர்கள் தம் கால் நடைகளுக்குத் தொழுவம் அமைத்துச் சிறந்த முறையில் காப்பாற்றுகிருர்கள். ஆயினும் சில இடங்களில் மேய்ச்சல் நிலம் இல்லாமையாலும், வளர்க்கும் முறையின்

சீர்கேடுகளாலும் எருதுகள் வளத்துடன் காணப்படுவதில்லை.

அரசாங்கத்தார் சில இடங்களில் கால்நடைப் பண்ணைகள் அமைத்திருக்கிறார்கள். கால்நடைகளைப்பற்றிய செய்திகளையறிந்த அதிகாரிகள் இப் பண்ணைகளைத் திறமையாக நடத்துகிறார்கள். ஆயினும் தேவையான எருதுகள் பெருகவில்லை. ஆகையால், இன்னும் பல பண்ணைகள் தோன்ற வேண்டும்,

தமிழ் நாட்டில் காங்கேயம் எருதுகள் மிகவும் புகழ்பெற்றவை. இந்த எருதுகளை உற்பத்தி செய்பவர் பழய கோட்டை பட்டக்காரர் அவர்கள். இவர் நடத்தும் கால்நடைப்பண்ணை இந்தியாவிலேயே மிகச் சிறந்தது என்று எல்லோரும் பாராட்டுகிறார்கள். இப்பண்ணையைப்பற்றி அறிவது நன்மையாதலால், பட்டக்காரர் வரலாற்றையும், கால்நடைப் பண்ணை பற்றிய விவரத்தையும் பார்ப்போம்.

# II. பழய கோட்டை

# பட்டக்காரர் வரலாறு.

## 1. பட்டக்காரர் பரம்பரை.

பழய கோட்டை என்பது, ஓர் ஊர். இது கோயம்புத்தூர் ஜில்லா, தாராபுரம் தாலூகாவில் உள்ளது. இது ஒரு காலத்தில் கோட்டை அமைந்த ஊராய் இருந்திருக்கலாம். அதனுல் பழய கோட்டை என்னும் பெயர் ஏற்பட்டது போலும். இது, ஈரோடு புகை வண்டி நிலயத்திற்குத் தென் கிழக்கே சுமார் 20 மைல் தூரத்தில் இருக்கிறது. இவ்வூருக் கருகில் நொய்யல் என்னும் ஆறு ஓடுகிறது. இதன் கரையில் ஒரு பெரிய அரண்மனை கட்டப்பட்டிருக்கிறது. இதைப் பழய கோட்டை அரண்மனை என்று சொல்லுவார்கள். இந்த அரண்மனைக்குச் சொந்தக்காரர் பட்டக்காரர் என்பவர் ஆவார்.

பட்டக்காரர் பரம்பரை மிகவும் பழமையான சிறப்புடையது. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்து இப்பரம்பரையின் வரலாறு உள்ளது. இப்பரம்பரையில் வீரர்கள் விளங்கியிருக்கிருர்கள்.

பட்டக்காரர் குல முன்னேர் ஒருவர் இருந்தார். அவர் சிறந்த வீரர். அக்காலத்தில்

பாண்டிய மன்னர் ஒருவர் தம் பகைவரோடு போர் செய்ய நேரிட்டது. அப்பொழுது பட்டக் காரர் படைத் தலைவராகப் போய்ப் பாண்டிய னுக்குத் துணைசெய்தார். போரில் வெற்றி ஏற் பட்டது. அதனால் பாண்டிய மன்னன் மகிழ்ச்சி யடைந்தான்; '**உத்தமக் காமிண்டான்**' என்னும் பட்டத்தையும், விருதுகளையும் கொடுத்துப் பெரு மைப்படுத்தினான். 'உத்தமக் காமிண்டான்' என் றால், 'சிறந்த படைத் தலைவன்' என்று பொருள். இப்பட்டம் செப்பேட்டில் பதிந்து கொடுக்கப் பட்டிருக்கிறது.

இன்னொரு பட்டக்காரர் இருந்தார். அவரும் சிறந்த வீரர். அவர் காலத்தில் விஜயநகர ஆட்சி நடைபெற்றது. தமிழ்நாடு அந்த ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. தென்னாட்டில், ஊமத்தூர் **விருபாட்சி உடையார்** என்பவர் பிரதிநிதியாய் இருந்தார். அக்காலத்தில் ஒரு போர் ஏற்பட்டது. அப்போரில் பட்டக்காரர் உடையாருக்கு உதவி செய்தார். அதனால் தென்னிலைக் கோட்டையில் வெற்றி ஏற்பட்டது. உடையார் மகிழ்ச்சியடைந் தார்; பட்டக்காரருக்கு '**மன்றாடியார்**' என்னும் பட் டம் கொடுத்துச் சிறப்புச் செய்தார்.

இச்செய்திகளுக்கு ஆதாரங்கள் உண்டு. அவை, பழயகோட்டை அரண்மனையில் இருக் கின்றன. 'உத்தமக் காமிண்டான்', 'மன்றாடியார்'

என்னும் பட்டப் பெயர்கள் பெற்ற சிறப்பால், 'பட்டக்காரர்' என்று எல்லோரும் மரியாதையாக வழங்கலானுர்கள்.

பட்டக்காரர் கொங்கு வேளாள குலத்தைச் சேர்ந்தவர். இவர் பரம்பரையினர் கோவை ஜில்லாவில் உள்ள கொங்கு வேளாளர் சமூகத் திற்குத் தலைமை உரிமை உள்ளவர்கள்; இச் சமூகத்தாருக்குள் ஏற்படும் சண்டை சச்சரவு களைத் தீர்த்துவைக்கும் அதிகாரம் உடையவர் கள். இக் குடும்பத்தில் பிறக்கும் மூத்த குமார ருக்கே பட்டக்காரர் என்னும் பெயர் உரியதாகும்.

முற்காலத்தில் சிறந்திருந்த சிற்றரசர்களுள், பாளையக்காரர் என்பவர்களில் இப் பட்டக்காரர் பரம்பரை ஒன்று. இதற்கு ஆதாரங்கள் உண்டு. காஞ்சிபுரத்தைத் தலைநகராகக்கொண்டு அர சாண்ட பல்லவ மன்னர்கள், பட்டக்காரர் சிறப் பைக் குறித்துச் செப்பேடுகள் வழங்கியிருக்கிறுர் கள். சேர, சோழ, பாண்டிய அரசர்கள் காலத் தில் பழய கோட்டை ஒரு பலம் மிகுந்த சிற் றரசாக விளங்கியிருக்கிறது.

முதல் பட்டக்காரர், கரியான் சர்க்கரை உத்தமக் காமிண்டான் என்பவராவார். கி. பி. 800-ல் இரண் டாவது பட்டக்காரரானவர், நல்ல சர்க்கரை உத் தமக் காமின்டான் என்பவர். இவர் டெல்லிக்குச் சென்று, அரசாங்கத்தாரிடம் 'சொட்டைமூனே'

என்னும் ஒருவகைப் போர் முறையை விளக்கிக் காட்டிப் பரிசு பெற்றாராம். இவ்வாறு இப் பரம்பரையில் வந்தோர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் வல்லவர்களாக விளங்கினர்கள்; சிலர் கல்வி யறிவில் சிறந்திருந்தார்கள்; சிலர் குதிரை ஏற்றம், வில், வாள்போர் ஆகியவற்றில் திறம் படைத்திருந்தார்கள்; சிலர் விவசாயத்துறையில் திறமை யுடையவராய் இருந்தார்கள்; சிலர் கால் நடை வளர்ப்பில் தேர்ந்தவர்களாய் இருந்தார்கள்.

மைசூரை ஆண்ட திப்பு சுல்தான், தனக்கு வேண்டிய குதிரைகளைப் பழைய கோட்டையிலிருந்து வாங்கிச் சென்றாராம். அப்பொழுது, ‘பஞ்சகல்யாணி’ என்னும் ஒரு குதிரையைப் பட்டக்காரர் திப்புவுக்கு மரியாதையுடன் கொடுத்தாராம். இதிலிருந்து இக்காலத்தில் கால் நடைகள் வளர்ப்பதுபோலவே முற்காலத்தில் குதிரைகளும் பழயகோட்டையில் ஏராளமாக வளர்க்கப் பட்டன என்பது தெரிகிறது.

இச் சிறப்பு வாய்ந்த பரம்பரையில் இப்பொழுது முப்பதாவது பட்டக்காரர் உள்ளார். நேரிடையான ஆட்சியுரிமைகள் இப்பொழுது இல்லை. ஆயினும் சுற்றுப்புறத்தில் வாழும் இவர் சமூகத்தார் இவரைத் தங்கள் அரசராகவே மதித்து நடந்து வருகின்றனர்; இவர் வாழும்

மாளிகையை 'அரண்மனை' என்றும், பட்டத்து உரிமையாளரை, 'எஜமானர்' என்றும் மரியாதையுடன் வழங்குகிறார்கள்.

## 2. ராய்பகதூர் நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார்

பழய கோட்டையில் இப்பொழுது 30-ஆவது பட்டக்காரராக உள்ளவர், திரு. **நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார்** அவர்கள். இவருடைய மேற்பார்வையிலேயே கால்நடைப்பண்ணை இப்பொழுது சிறப்பாக நடைபெறுகிறது. இவருடைய தந்தை காலஞ்சென்ற **ராய்பகதூர் ந. நல்ல தம்பி சர்க்கரை மன்றாடியார்** அவர்கள். இவர் 29-ஆவது பட்டக்காரராய் இருந்தவர். இவரே இப்பொழுதுள்ள கால்நடைப்பண்ணையை மேன்மையும் புகழும் பெறச்செய்தவராவார். ஆகையால், இவருடைய வரலாற்றை அறிவோம்.

25-ஆவது பட்டக்காரராயிருந்த நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார் அவர்கள் (கி. பி. 1781—1782) காலத்திலேயே பழய கோட்டையில் பசு, எருது முதலியவற்றுடன் குதிரைகளும் வளர்க்கப்பட்டன என்று தெரிகிறது. அந்தத் தொடர்புதான் நமது ராய்பகதூர் அவர்களையும் கால்நடை வளர்ப்பில் ஊக்கங்கொள்ளச் செய்திருக்கிறது என்று சொல்லலாம்.

ராய்பகதூர் ந. நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார் அவர்கள், 1896-ஆம் ஆண்டு முதல் 1945-ஆம் ஆண்டு வரையில் ஐம்பது ஆண்டுகளாகப் பட்டக்காரராயிருந்து சிறப்படைந்தார்; பொதுநலச் செயல்களில் ஈடுபட்டுப் பாராட்டப் பெற்றார்; கால்நடைப்பண்ணையை ஊக்கமாக நடத்திப் பெரும் புகழ் பெற்றார். நீண்டகாலம் பட்டக்காரராய் இருந்தவர் இவரேயாவார்.



ராய்பகதூர்
நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார்

இவர், 28-ஆவது பட்டக்காரராயிருந்த நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார் அவர்களின் மூத்த மகனாக, 1886-ஆம் ஆண்டு, டிசம்பர் 30-ம் நாளில் பிறந்தார். தந்தையார்

இறக்கவே, இவர் இளம்பருவத்திலேயே பட்டக் காரர் ஆனார். ஆகையால் கல்விப் பயிற்சியில் அதிகமாய் ஈடுபட முடியாமற்போய்விட்டது. இவருடைய தாயார் கல்வியில் சிறந்தவர். ஆகை யால், இவருக்கு ஆங்கிலம் கற்பிக்க ஏற்பாடுசெய் தார். இவருக்கு இளமையிலேயே கால்நடை வளர்ப்பில் அதிக ஆர்வமும், ஊக்கமும் இருந்த தால், தாயாரின் முயற்சி பயன்தரவில்லை. ஆசி ரியர் 'மரம்' என்று எழுதச் சொன்னால், இவர் 'மாடு' என்றுதான் எழுதுவாராம்! இதிலிருந்து இவருக்கு மாடுகளிடத்தில் எவ்வளவு அன்பு இருந்தது என்று தெரிகிறதல்லவா?

பழய கோட்டைப் பரம்பரையில், நான்கு தலைமுறையாகக் கால்நடைப்பண்ணை தொடங்கி நடைபெற்றுவருகிறது. ஆகையால், இவர் இளம் பருவத்தில் மாடுகளிடையிலேயே எப்பொழுதும் பழகிவந்தார்; கன்றுக்குட்டிகளிடம் நெருங்கிப் பழகி அன்புகாட்டி அகமகிழ்வார்; அவைகளுக்கு உணவு கொடுத்து உள்ளம்பூரிப்பார்; அவைகளு டன் குதித்து விளையாடிக் களிப்படைவார். இத னால் இவருக்கு இயற்கையாகவே மாட் டின் தன்மை, நுட்பங்கள் தெரியவந்தன. இவர் கால்நடைகளுடனேயே பழகி வந்ததால், கால் நடைகளைப்பற்றிய ஆராய்ச்சியில் ஆர்வம் ஏற் பட்டது; கால்நடைப்பண்ணையைப் பெருக்க

வேண்டும் என்னும் ஊக்கமும் உண்டாயிற்று.

இவர் கால்நடை வளர்ப்பாளர் பரம்பரையில் பிறந்தவர்; மேலும் விவசாயி. ஆகையால், கால்நடைகளைப்பெருக்கவேண்டும் என்று ஊக்கங் கொண்டதில் ஆச்சரியமில்லை. இவருடைய ஆர்வத்தாலும் ஊக்கத்தாலும் நாளுக்கு நாள் கால்நடைப்பண்ணை வளரலாயிற்று. சில நூறு மாடுகளே யிருந்த பண்ணையில் இரண்டாயிரம் மாடுகளுக்குமேல் பெருகின.

கால் நடைப் பண்ணையை நடத்துவதற்கு நிறைந்த அனுபவம் வேண்டும்; ஆர்வமும் ஊக்கமும் வேண்டும்; மேய்ச்சல் நிலம், செல்வவசதி முதலிய எல்லாம் வேண்டும். இவைகளெல்லாம் பொருந்தியவர் இவர். ஆகையால் கால்நடைப் பண்ணையை வெற்றிகரமாக நடத்திப் புகழ் பெற்றார். இவருடைய கால்நடைப் பண்ணை 'இந்தியாவிலேயே சிறந்தது' என்னும் புகழுக்கு உரியதாயிற்று.

'காங்கேயம் எருது' என்னும் உயர்சாதி மாடுகள், 'சிறந்த இனம்' என்று இப்பொழுது எல்லோராலும் புகழப்படுகின்றன. இந்தியாவில் மட்டுமல்லாமல் வேறு நாட்டாரும் 'சிறந்த இனம்' என்று காங்கேயம் எருதுகளைப் புகழ்கிறார்கள். இத்தகைய சிறந்த மாடுகளை இவர்தான் அரும்பாடு பட்டுத் தமது கால்நடைப்பண்ணையில் உற்பத்தி

செய்தார். இப்பொழுது இம்மாடுகள் இந்தியா வெங்கும் பரவி, விவசாயம் முதலிய பல வேலை களுக்கும் பயன்படுகின்றன.

இவர் காலத்திலேதான் 'பட்டக்காரர்' என்னும் பெயர் தமிழ் நாடெங்கும் நன்றாய்த் தெரியலாயிற்று. இதற்குக் காரணம் இவருடைய கால் நடைப்பண்ணையின் புகழும், காங்கேயம் எருதுகளின் சிறப்புமேயாகும். இவற்றுடன் இவருடைய பொதுநலச் செயல்களும் இவர் புகழை அதிகமாக்கின.

இவர் கோயம்புத்தூர் ஜில்லாப் பெரியார்களில் ஒருவர். இவர் 1906-ஆம் ஆண்டு முதல் 1945-ஆம் ஆண்டு வரையில், கோயம்புத்தூர் ஜில்லா போர்டு உறுப்பினராய் இருந்தார்; 1921 முதல் 1933 வரையில் ஈரோடு தாலூகா போர்டு தலைவராய் இருந்தார்; 1933 முதல் 1936 வரையில் கோவை ஜில்லா போர்டு துணைத்தலைவராய் இருந்தார். 1936 முதல் 1938 வரையில் கிழக்குக் கோவை ஜில்லா போர்டு தலைவராய் இருந்தார்.

இக்காலங்களில் கிராமப் போக்குவரத்து, எளிய மக்களுக்கு வைத்திய உதவி, ஆரம்பப் பாடசாலைகள், குடிதண்ணீர் வசதி முதலிய பொதுநலச் செயல்களில் இவர் கவனம் செலுத்தி, பல நன்மைகள் செய்திருக்கிறார். இவர் தொண்டுகளைப் பாராட்டி இவருடைய உரு

வப்படத்தை, கோவை ஜில்லா போர்டு கட்டிடத்தில் திறந்துவைத்திருக்கிறுர்கள்.

இன்னும், இவர் புதுடில்லி அகில இந்தியக் கால்நடைக் காட்சிக் குழுவில் உறுப்பினராய் இருந்தார்; சென்னைக் கால்நடை வளர்ச்சிக் குழுவில் உறுப்பினராய் இருந்தார்; ஈரோடு கூட்டுறவு நில அடமான பாங்கின் தலைவராய் இருந்தார்; கோவை விவசாயக் கல்லூரியின் மேற்பார்வையாளராய் இருந்தார்; ஈரோடு வட்ட அற நிலையக் குழுவின் தலைவராய் இருந்தார்; சென்னை சட்டசபை உறுப்பினராய் இருந்தார். இப்பதவிகளில் இருந்து இவர் பல பொதுநலத் தொண்டுகள் செய்திருக்கிறுர்.

சென்னைக் கவர்னர்களாய் இருந்த பென்ட்லண்டு பிரபு, சர். ஜார்ஜ் ஸ்டான்லி, எர்ஸ்கின் பிரபு ஆகியவர்களும், அரசாங்கக் கால் நடை இலாகா அதிகாரிகளும் இவருடைய கால்நடைப் பண்ணையைப் பார்வையிட்டு இவர் சேவையைப் பாராட்டியிருக்கிறுர்கள்.

இவர் தமிழ் மொழியில் சிறந்த புலமையுள்ளவர்; ஓய்வு நேரங்களில் அலுப்படையாமல் படித்துக்கொண்டிருந்தார். பல செய்யுள் நூல்களைப் படித்து மகிழ்ந்தார். மேலும் இவரே சில நூல்களையும் எழுதியிருக்கிறுர். கொங்குநாட்டுச் சிறப்புக்களைத் தொகுத்து, 'கொங்கு மண்டல

சதகம்' என்னும் நூலை இயற்றிப் பதிப்பித்திருக்கிறார்; இன்னும், 'சிவன் மலை புராணம்,' 'சிவன் மலைக் குறவஞ்சி,' 'காதல்', 'மங்கல வாழ்த்து' முதலிய நூல்களையும் இயற்றி வெளியிட்டிருக்கிறார். இவற்றால், இவருடைய தமிழ்ப்புலமையும் சைவப்பற்றும் நன்றாய்த் தெரிகின்றன.

ஒரு சமயம் மழை பெய்யாமல் நிலம் வறண்டது. ஆகையால், மாடுகளின் மேய்ச்சலுக்கு வழியில்லாமல் போய்விட்டது. அதனால் இவர் மனங்கலங்கவில்லை. உடனே இவர் 2000 மாடுகளையும் ஆட்களை ஓட்டிக்கொண்டு வரச்செய்து புறப்பட்டார். அந்தியூர்க் காட்டில் மேய்ச்சலுக்கு வசதியிருந்தது. அங்கேயே மூன்று நான்கு மாதங்கள் மாடுகளுடனேயே தங்கியிருந்தார். இதிலிருந்து, இவருக்குக் கால்நடைகளைக் காப்பதில் எவ்வளவு ஆர்வம் இருந்தது என்பது வெளியாகிறது.

இவர் இறக்கும் நேரத்தில், தமது இரு குமாரர்களையும் பார்த்து, 'நமது சொத்தில் மூன்றில் ஒரு பங்கைப் பண்ணைக்கு ஒதுக்கிவையுங்கள்' என்று சொன்னாராம். இதிலிருந்து இவர் தமது பண்ணையைத் தமது குமாரர் போலவே கருதி அன்புகொண்டிருந்தார் என்பது விளங்குகிறதல்லவா?



திரு. ந. நல்ல சேனுபதி சர்க்கரை மன்ருடியார்.

ராய்பகதூர் ந. நல்லதம்பி சர்க்கரை மன்ருடியார் அவர்கள் புகழ்பெற்ற கால்நடைப் பண்ணேயின் காப்பாளர்; சிறந்த பொதுநலத்தொண்டர்; 'பட்டக்காரர்' என்று எல்லோராலும் மரியாதையுடன் சொல்லப்பட்டவர். இவர் 27-8-1945ல் காலமானுர். இவர் மறைவு, பொதுவாகத் தமிழ் நாட்டு விவசாயத்திற்கும், சிறப்பாகக் கால்நடை வளர்ச்சிக்கும் நஷ்டமேயாகும்.

இவருடைய மூத்த குமாரர், திரு. ந. நல்ல சேனபதி சர்க்கரை மன்ருடியார் அவர்கள். இவர் இப்பொழுது 30-ஆவது பட்டக்காரராய் விளங்குகிருர். இவர் தம் தந்தையாரைப் போலவே கால்நடை வளர்ச்சியில் ஆர்வம் உள்ளவர்; பொர்துநலத் தொண்டில் ஊக்கம் நிறைந்தவர். தந்தைக்கு இணேயான இவர் மேற்பார்வையில் கால்நடைப்பண்ணே மிகச் சிறப்புடன் நடைபெற்றுவருகிறது.

---

## III கால் நடைப் பண்ணை

### 1. நோக்கமும் வசதியும்.

பழயகோட்டை பட்டக்காரரின் கால்நடைப் பண்ணை நான்கு தலைமுறையாக நடந்துவருகிறது. பட்டக்காரர் 14000 ஏகருக்கு மேல் நிலபுலம் உள்ளவர். இந்நிலங்களை உழுது பயிர் செய்யவேண்டும் அல்லவா? பயிர்செய்வதற்குப் பத்து, இருபது மாடுகள் இருந்தால் போதுமா? ஏராளமாக மாடுகள் வேண்டுமல்லவா? அதனுலேயே மாடுகளை வளர்க்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதுதான் கால்நடைப்பண்ணை தோன்றியதற்குக் காரணம்.

முதலில் சொந்த விவசாயத்திற்காகவே கால்நடைப்பண்ணை ஏற்பட்டது. ஆனுல், பிறகு எல்லோருக்கும் பயன்படும் வகையில் இப்பொழுது பெருகி வளர்ந்திருக்கிறது.

இப்பண்ணை பழயகோட்டையில் அமைந்திருக்கிறது. இவ்வூரின் சுற்றுப்புறம் கால்நடை வளர்ப்புக்கு ஏற்றதாய்,புன்செய்க் காடுகள் நிறைந்திருக்கிறது. இங்குச் சுண்ணும்புக் கற்கள் அதிகம். ஆகையால், இந்நிலத்தில் முளைக்கும் புல் முதலிய பயிர்களில் சுண்ணும்புச் சத்து இருக்கிறது. இவற்றை மேயும் மாடுகளுக்கு எலும்பு ஊற்றம் அதிகமாகும்.

நிலங்கள் மேட்டுப்பாங்கானவை. மழை பெய்தால்தான் பயிர் விளையும். இல்லாவிட்டால் பயிர் வாடிப்போகும்; நஷ்டம் ஏற்படும். ஆகையால், பட்டக்காரர் தமது நிலங்களில் பெரும் பகுதியை மேய்ச்சல் காடுகளாக ஒதுக்கியுள்ளார்; சிறு பகுதியை விவசாயம் செய்ய ஒதுக்கியுள்ளார்.

விவசாயத்திற்குக் கால்நடைகள் வேண்டும். நல்ல மாடுகளை ஒன்றிரண்டு நாட்களில் உண்டாக்கிவிடமுடியாது. அவைகளை உற்பத்தி செய்வதற்கு வசதியும், நீண்டகால உழைப்பும் வேண்டும். மேலும் ஓர் இடத்தில் இருக்கும் கால்நடைகள் மற்ருேர் இடத்தில் அவ்வளவு நன்ருக வளர்ச்சியடைவதில்லை.

பட்டக்காரர் இக்காரணங்களை யெல்லாம் பலநாள் எண்ணிப் பார்த்தார். கால்நடைகளை வளர்ப்பதால் வருமானம் வருவதோடு நாட்டுக்கு நன்மையும் ஆகும் என்று முடிவுசெய்தார். நாற்பது ஆண்டுகள் இடைவிடாமல் பாடுபட்டுக் கால்நடைகளைப் பெருக்கினுர். இன்று, கால்நடைப் பண்ணை வளர்ச்சியடைந்திருக்கிறது.

## 2. மேய்ச்சல் நிலம்.

பட்டக்காரருக்குச் சொந்தமான மேய்ச்சல் நிலம் மிகவும் விசாலமானது. இந்நிலத்தின் மண், செம்மண் கலந்தது. இதிலுள்ள சுண்ணும்புக்கல், 'ஓடைக்கல்' என்று சொல்லப்படும்.

இது எல்லாவிடத்திலும் பரவியிருக்கிறது. இந்நிலத்தில் மழை பெய்தால் ஈரம் பல நாளைக்கு இருக்கும். இது இந்நிலத்திற்குரிய தனிச் சிறப்பு. இதில் முளைக்கும் புல் சுண்ணும்புச் சத்துடன் சுவையாய் இருக்கும்.

இந்நிலத்தில் முளைக்கும் புற்களில் முக்கியமானது கொளுக்கட்டைப்புல். இது சிறந்த சத்துள்ளது; வெயில் தாங்கும். பல மாதங்கள் மழையில்லாவிட்டாலும் இப்புல் காய்ந்து போகாது. இந்தப் புல்லை மாடுகள் விரும்பி மேய்கின்றன. இன்னும் வேறு புல் வகைகளும் உண்டு. அவைகள், வெண்ணம்புல், ஒட்டன் புல், குருட்டுப்புல், சோளப்புல் முதலியனவாம். இன்னும், நரிப்பயிற்றங்கொடி, சவுரிக்கொடி, செப்பு நெருஞ்சி முதலியவையும் முளைக்கின்றன.

நல்ல மழைக்காலத்தில் எல்லா வகைப்புற்களும் நிறைந்திருக்கும். கொளுக்கட்டைப்புல்லின் விதை சீக்கிரம் உதிர்ந்துவிடும். ஆகையால், மாடுகள் மேயும் பொழுது கால்பட்டுக் கீழே விழுந்து முளைக்கும்.

மேய்ச்சல் நிலம் நாலாயிரம் ஏகர் வரையில் இருக்கிறது. இது தனித்தனிப் பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பிரிவின் நாற்புறத்திலும் பாதுகாப்பாக 'உயிர்வேலி' பயிர்செய்யப்பட்டிருக்கிறது.

மேய்ச்சல் நிலத்தில் ஏராளமான வெள் வேலா மரங்களைப் பார்க்கலாம். இவைகள் மாடு களுக்கு நிழலைத்தருகின்றன. இம்மரத்தின் காய்கள் மாடுகளுக்குச் சிறந்த உணவாகும். இக் காய்கள் முற்றிக் கீழே உதிரும் காலத்தில், நிலத் தில் புல் இருக்காது. அப்பொழுது மாடுகள் இக்காய்களைத் தின்று தண்ணீர் குடிக்கும். இவ் வுணவால் மாடுகள் கொழுத்து வளரும். அவற் றின் உடம்பில் மினுமினுப்பு உண்டாகும்.

பண்ணை ஆட்கள் வேலாங்காய்களைப் பொறுக்கிச் சேர்ப்பார்கள். மாடுகளுக்கு உணவு கொடுக்கும்பொழுது இதையும் சேர்த்துக்கொடுப் பார்கள்.

வேலா மரங்கள் கலப்பை, வண்டி, மாடு கட்டும் முளை முதலியவற்றிற்கு உபயோகப்படு கின்றன, இம்மரங்களைத் தனியே பயிர் செய்வ தில்லை. மாடுகள் காய்களைத் தின்று விதைகளைச் சாணத்துடன் வெளியே தள்ளுகின்றன. விதை விழுந்த இடத்தில் தானே முளைத்து மரங்களாய் வளர்கின்றன. ஆட்கள், மரங்கள் நெருக்கமில் லாதபடி சில மரங்களை வெட்டி விடுவார்கள்.

நிலத்தில் மேயும் மாடுகளின் சாணத்தை எடுப்பதில்லை; அப்படியே நிலத்திற்கு உரமாக விட்டுவிடுகிறார்கள். நாலைந்து ஆண்டுகளுக்கு

ஒருமுறை இந்நிலத்தில் பயிர் செய்வதுண்டு. இதனால், பயிர் நன்றாய்ச் செழித்து விளைகிறது.

### 3. மேய்க்கும் முறை.

மேய்ச்சல் நிலத்தின் பிரிவுகள், 'குரைகள்' என்று சொல்லப்படும். பருவமழைபெய்து பத்து நாள் கழித்து இக்குரைகளில் கால்நடைகளை மேய விடுவார்கள். மேய விடுவதில் சில முறைகள் உண்டு.

கால்நடைகளை வயது வகையிலும், இன வகையிலும் பிரித்துவிடுவார்கள். அதாவது, கன்றுகள் பால் மறந்ததும் காளைக்கன்றுகள் வேறாகவும், கடாரிக்கன்றுகள் வேறாகவும் பிரித்து விடுவார்கள். ஒரு வயதுக் காளைக்கன்றுகளை ஒரு பிரிவில் மேயவிடுவார்கள்; ஒரு வயதுக் கடாரிக் கன்றுகளை வேறொரு பிரிவில் மேயவிடுவார்கள். இவ்வாறே இரண்டு வயது, மூன்று வயதுக் காளைகள், கடாரிகளைத் தனித்தனிப் பிரிவுகளில் மேய விடுவார்கள்.

கால்நடைகளை 50 முதல் 100 வரையில் ஒவ்வொரு குரைகளிலும் மேய விடுவார்கள். குரைகளின் பரப்பு, புல் வளர்ச்சி இவற்றைப் பொறுத்து, கால்நடைகளின் எண்ணிக்கை கூடும்; அல்லது குறையும்.

கால் நடைகள் மேய்ச்சல் காடுகளிலேயே இருக்கும்; அங்கேயே இரவு பகலாக மேயும்.

மேய்ச்சல் நிலத்தில் வெட்டப்பட்டிருக்கும் கிணறுகளில் தண்ணீர் குடிக்கும். இக்கிணறுகளை 'வாவி' என்று சொல்லுவார்கள். இக்கிணறுகள் சரிவாக வெட்டப்பட்டிருக்கின்றன. ஆகையால், கால்நடைகள் இவற்றில் இறங்கித் தண்ணீர் குடிக்க வசதியாய் இருக்கிறது.

கால்நடைகள் தங்குவதற்குத் தனியிடம் கிடையாது. திறந்த வெளியான குரைகளிலேயே மேய்ந்து வளர்கின்றன. வெயில், மழை, பனி, காற்று எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டே வாழ்கின்றன. இப்பழக்கத்தால், பிற்காலத்தில் எவ்வளவு கஷ்டமான வேலையையும் செய்யும் திறமை, இக்கால்நடைகளுக்கு ஏற்படுகிறது.

குரைகளில் மேயும் கால்நடைகளைச் வேலை ஆட்கள் பார்த்துக்கொள்வார்கள். இவர்கள் கன்றுகளை அடிக்கடி கவனிப்பார்கள். கன்றுகளின் வளர்ச்சிக்குத் தகுந்தபடி குரைகளை மாற்றுவார்கள்;கன்றுகளின் எண்ணிக்கையைக் குறைப்பார்கள்.

ஒவ்வொரு குரைகளிலும் ஒரே மாதிரியான கன்றுகள் மேய்வதைப் பார்க்க அழகாயிருக்கும். இவைகள் தம் விருப்பம்போல் மேய்ந்துகொண்டும், துள்ளிக்குதித்து விளையாடிக்கொண்டும் இருப்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.

## 4. கால்நடைகள்.

பட்டக்காரரின் கால்நடைப் பண்ணையில் பலவகைக் கால்நடைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன; வளர்க்கப்படுகின்றன. அவைகள், குதிரைகள், செம்மறி ஆடுகள், மைசூர் ஜாதி மாடுகள், காங்கேயம் மாடுகள் என்பவையாம்.

**குதிரைகள் :—** இங்கு உற்பத்தியாகும் குதிரைகள் 'நாட்டுக் குதிரை' என்று சொல்லப்படும். காங்கேய நாட்டுக் குதிரைகள் 1914-க்கு முன் அதிகமாக உற்பத்திசெய்யப்பட்டன. மோட்டார்கள் பெருகியதால், குதிரைகளுக்குக் கிராக்கி குறைந்தது. ஆகையால் குதிரை வளர்ப்பில் ஊக்கம் தளர்ந்தது. இப்பொழுது நாற்பது ஐம்பது குதிரைகளே வளர்க்கப்படுகின்றன.

காங்கேய நாட்டுக் குதிரைகள் நன்ருய் உழைக்கக்கூடியவை. இவற்றின் கால்கள் உறுதியுடையவை. இவைகள் சவாரியில் களைப்படைவதில்லை. முப்பது மைல் பிரயாணம் செய்து உடனே திரும்பி வரலாம்.

**ஆடுகள் :—** பண்ணையில் சுமார் 2000 ஆடுகள் இருக்கின்றன. நல்ல சிவப்பு நிறமுள்ள செம்மறி ஆடுகள் ஒரு பகுதி; 'மைலம்பாடி' என்று சொல்லப்படும் ஒரு ஜாதி ஆடுகள் மற்ருெரு பகுதி; குறும்பை ஆடுகள் இன்ஞெரு பகுதி.

ஆட்டுப்புழுக்கை சிறந்த எரு அல்லவா? இந்த எருவிற்காகத்தான் ஆடுகளை வளர்க்கிறார்கள். ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஆட்டுக் கடாக்களை விற்றுவிடுவார்கள்; கடாரிகளைப் பட்டியில் சேர்த்துக்கொள்வார்கள். ஆனால், வயதான கடாரிகளைக் கழித்துவிடுவார்கள்.

குறும்பை ஆடுகள், பிகானீர் கடாவுடன் சேர்த்துப் புதிய சந்ததிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பிகானீர் ஆடுகளின் மயிர் சிறந்தது. இதனால் கம்பளம் செய்யலாம். ஆகையால், குறும்பை ஆடுகள் புதிய முறையில் உற்பத்தி செய்து வளர்க்கப்படுகின்றன. இவற்றை வளர்ப்பதால் கம்பளிமயிர் மூலம் நிறைய வருமானம் கிடைக்கிறது.


**மைசூர் மாடுகள்:**—மைசூரில் ஒருவகை மாடுகள் சிறப்பாக வளர்கின்றன. அவை 'அமிர்த மகால்' என்று சொல்லப்படும். ஆயினும், மைசூரிலிருந்து கொண்டுவரப்பட்டதால், இவை 'மைசூர் ஜாதி மாடுகள்' என்றே சொல்லப்படுகின்றன.

பண்ணையில் 'அமிர்த மகால்' இனப் பசுக்களைக் கொண்டுவந்து வளர்க்கிறார்கள். இவற்றிலிருந்து மாடுகள் உற்பத்தியாகின்றன. இவ்விடத்தில் இம் மாடுகள் நன்றாய் வளர்கின்றன. ஆயினும், காங்கேய மாடுகளைப் பெருக்கும் நோக்

கத்தால், இம் மாடுகளைக் குறைத்துவிட்டார்கள். இப்பொழுது மைசூர் மாடுகள் நூற்றுக்குக் குறைவாகவேதான் இருக்கின்றன.

## 5. காங்கேயம் மாடுகள்.

பட்டக்காரர் பண்ணையில் காங்கேயம் மாடுகள்தான் மிகச்சிறந்தவை. இம் மாடுகளாலேயே இப் பண்ணை அதிகப் புகழ் பெற்றிருக்கிறது.




காங்கேய மாட்டின் திமிள்

காங்கேயம் என்னும் ஊர்ப்பகுதியில் இம் மாடுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆகையால், இவை 'காங்கேயம் மாடுகள்' என்று சொல்லப்படுகின்றன.

தோற்றம்.—காங்கேயம் மாடுகள் நடுத்தரமான உயரமுடையவை. இவற்றில் சில மாடுகள் உயரமாகவும் இருக்கும். இம் மாடுகள்,

உடல் உறுதி உடையவை, இவற்றின் தலை சிறியது; நெற்றி அகலமானது; கொம்பு நல்ல கனமுள்ளது; அவை சாய்ந்து இரண்டும் சேரும்படி அமைந்திருக்கும்; திமில், உருண்டு திரண்டு இருக்கும். (படத்தைப் பாருங்கள்) மார்பு அகலமானது; கால்கள் குட்டையானவை; விலா எலும்புகள் நல்ல ஊற்றம் உள்ளவை; முதுகு அகலமானது; மயிர், மெல்லியதாய் 'ஒளி மயிர்' என்று சொல்லும்படி உள்ளது. வால் நீளமானது; வால் மயிர் குஞ்சம்போல் கருமையாய் இருக்கும். இது தரையைத் தொடும்! இத்தகைய காங்கேயம் மாடுகள் பார்ப்பதற்கு மிகவும் அழகாய் இருக்கும்.



உறுதியான கால்கள்

இம் மாடுகள் கட்டான உடம்பு உள்ளவை. ஆகையால், சுறுசுறுப்பும் பாரம் இழுப்பதில் திறமையும் உள்ளனவாய் இருக்கின்றன. இவை நீண்ட காலம் உழைக்கக்கூடியவை. இந்தியா

விலேயே இம் மாடுகள் மிகச் சிறந்தவை என்று பெயர் வாங்கியிருக்கின்றன.

**பொலிகாளை** ;—பொலிகாளை என்பது, மாடுகளை உற்பத்தி செய்வதற்கு உபயோகப்படுவது ஆகும். இதன் நிறம் கருமை அல்லது கருமையிலே. நெற்றி, தலை, திமிள், கழுத்து, முதுகு பின்புறம்தொடை வரையில் கறுப்பு நிறமாக இருக்கும். இக் கறுப்பு நிறம் விதையடித்து விட்டால், மூன்று நான்கு மாதங்களில் வெண்மையாக மாறிவிடும். கால் நடைப் பெருக்கத்திற்கு இப் பொலிகாளைகள் தேவையாகும். இப் பண்ணையில் உற்பத்தியாகும் பொலிகாளைகள் இத் தேவைக்கு மிகவும் உதவுகின்றன.



தரையைத்தொடும் வால்

ஆண்டுதோறும் ஐம்பது, அறுபது பொலி காளைகள் விற்பனை செய்யப்படுகின்றன. கோயம்

புத்தூர், சேலம், தஞ்சாவூர், தென்னார்க்காடு முதலிய ஜில்லா போர்டாரும், சென்னைச் சர்க்காரும், பெரிய விவசாயப் பண்ணைக்காரர்களும் இப்பொலி காளைகளை வாங்குகிறார்கள். இக்காளைகளின் விலை ரூபாய் 500 முதல் 2000 வரையில் ஆகும்.

**எருதுகள்:—** எருதுகளின் நிறம், கறுப்பு. இவை, பாரம் இழுப்பதில் பெயர் பெற்றவை. மற்ற இன எருதுகளைவிட நீண்டகாலம் உழைக்கக்கூடியவை. பதினைந்து வருஷகாலம் நன்றாய் வேலை செய்யும். பாரம் இழுத்தல், நீர் இறைத்தல் முதலிய வேலைகளுக்குஉபயோகப்படுகின்றன. மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி முதலிய ஜில்லாக்காரர்கள் இவ்வெருதுகளை அதிகமாக வாங்குகிறார்கள். இப்பண்ணையில் ஆண்டு ஒன்றுக்கு 60 அல்லது 70 ஜதை எருதுகள் விற்கப்படுகின்றன. ஒரு ஜதை எருதின் விலை சுமார் 600 ரூபாய் முதல் 2500 ரூபாய் வரையில் ஆகும்.

**பசுக்கள்:—** பசுக்கள், மயிலை அல்லது வெள்ளை நிறமாயிருக்கும். சில பசுக்களுக்கு முகம் கறுப்பு நிறமாய் இருக்கும். இவற்றின் முன்னங்கால்கள் கருநிறமாய் இருக்கும்; நான்கு கால்களிலும் குளம்புக்குமேல் கருநிறம் இருக்கும். இவை ஓராண்டுக்கு ஒரு கன்று போடும். ஒவ்வொரு பசுவும் 12 முதல் 15 வரையில் கன்றுகள்போடும்.

இப்பசு ஒரு நாளைக்கு 6 பவுண்டு பால் தருகிறது. அதிகப்பால் தரும் பசுக்களும் இருக்கின்றன. பசுக்கள் அதிகமாய்ப் பால் கறக்க முயற்சிசெய்து வருகிறார்கள். இதற்காகச் சென்னை அரசாங்கத்தார் ஒரு அதிகாரியை இங்கே ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்பண்ணையில் கறவை மாடுகள் முந்நூறுக்குமேல் இருக்கின்றன. ஒரு நல்ல பசுவின் விலை 600 ரூபாய் முதல் 1500 ரூபாய் வரையில் ஆகும்.

**கன்றுகள்:**— கன்றுகள் பிறந்தவுடன் சிவப்பு நிறமாய் இருக்கும். அடிவயிறு, கால்களின் பின்புறம், குளம்புகளுக்கு மேல் இடம் ஆகியவற்றில் கறுப்பு நிறம் இருக்கும். நான்கு மாதங்களுக்குள் சிவப்பு நிறம் கறுப்பு நிறமாக மாறிவிடும். நிறம் மாறுவது இந்த ஜாதி மாடுகளின் இலட்சணமாகும். இளங்காளைக் கன்றுகள் ஊட்டு மறந்தவுடன் 150 ரூபாய் முதல் 300 ரூபாய் வரையில் விலைக்கு விற்கப்படுகின்றன.

கடாரிக்கன்றுகளைப் பெரும்பாலும் விற்பதில்லை. இப்பண்ணையில் 200 கடாரிக்கன்றுகளுக்கு மேல் இருக்கின்றன. இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடாரிக் கன்றுகளைக் கட்டுவதற்குப் பழக்கம் செய்வார்கள். பிறகு தீனி கொடுத்து வளர்ப்பார்கள். சில கடாரிக் கன்றுகளை விற்பதும் உண்டு. அவற்றின் விலை

300 ரூபாய் முதல் 1000 ரூபாய் வரையில் ஆகும்.

## 6. மாட்டுத் தீவனம்.

கால்நடைகளுக்குக் கொடுக்கும் உணவைத் 'தீவனம்' என்று சொல்வது வழக்கம். இப்பண்ணையில் உள்ள கால்நடைகள், மூன்று ஆண்டுகள் வரையில் மேய்ச்சல் மூலமாகவே வளர்க்கப்படுகின்றன. மழைபெய்யாமல் மேய்ச்சல் நிலம் வறண்டு, புல் முதலியவை இல்லாமற்போனால், அப்பொழுது தீவனம் கொடுக்கப்படும்.

சாதாரணமாகக் கறவை மாடுகள், பொலி காளைகள், பால் ஊட்டும் கன்றுகள் ஆகிய இவைகளுக்குத் தீவனம் கொடுக்கிறார்கள். பருவப் பயிர் செய்யும் காலங்களில் கம்பந் தட்டைகள், சோளத் தட்டைகள் ஆகியவற்றைச் சேகரித்து மாடுகளுக்குப் போடுகிறார்கள். தீவனப் பஞ்சம் ஏற்படும் காலங்களில், தஞ்சாவூரிலிருந்து வைக்கோலைக் கொண்டுவந்து போடுவது உண்டு.

சில ஆண்டுகளுக்குமுன் மழைபெய்யாமல் நிலம் வறண்டுபோய்விட்டது. அதனால் கால்நடைகளுக்குத் தீவனப் பஞ்சம் ஏற்பட்டது. வைக்கோல் கொண்டுவருவதற்கு ரயில் வசதி இல்லை. இந்நிலையில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட கால்நடைகளை எவ்வாறு காப்பது? காலஞ்சென்ற 29-ம் பட்டக்காரரர் ராய்பகதூர் நல்ல

தம்பி சர்க்கரை மன்ருடியார் அவர்கள் இதற்காகக் கலங்கவில்லை. அந்தியூர் மலைப்பிரதேசம் மேய்ச்சலுக்கு ஏற்றதாய் இருந்தது. உடனே பட்டக்காரர், ஆட்களை ஏவி எல்லா மாடுகளையும் ஓட்டிக்கொண்டு புறப்பட்டார். அக்காட்டுப் பிரதேசத்தில் நான்கு மாதங்கள் மாடுகளுடன் இருந்து அவைகளை மேயவிட்டுக் காப்பாற்றினூர்.

கிணற்று நீர்ப்பாசனத்தால் சோளம், சில வகைப் புற்கள் முதலியவை பயிரிடுவது உண்டு. இவைகள் கால்நடைகளுக்குத் தீவனமாகும். ஆகையால், இவற்றை இங்கே பயிரிடுகிருர்கள்.

மேய்ச்சல் நிலத்தில் மூன்று ஆண்டுகள் வளர்ந்த மாடுகளை, நல்ல முறையில் வளர்ப்பதற்குத் தீனி கொடுக்கவேண்டும். கறவை மாடுகளுக்கும் வேலைசெய்யும் மாடுகளுக்கும் தீனி அவசியம். ஆகையால் பருத்திக்கொட்டை, பிண்ணுக்கு, அரிசித் தவிடு முதலியவற்றைக் கலந்து கொடுப்பார்கள்

கால்நடைகளைச் சிறந்த முறையில் வளர்ப்பதற்குச் சிலஉணவுகள் கொடுப்பது உண்டு. அவை கொள்ளு, பயறு, உளுந்து, தட்டைப்பயறு முதலியவை. இவைகளைத் தண்ணீரில் ஊறவைத்து நன்ருய் ஆட்டி உணவுடன் கலந்து கொடுப்பார்கள். இவற்றை உண்ணும் மாடுகள் வளப்பத்துடன் வளரும். கால்நடைகள், ஆறுமாதம்

மேய்ச்சல் மூலமாயும் ஆறுமாதம் தீனி மூலமாயும் வளர்க்கப்படுகின்றன.

## 7. மாடுகளைப் பழக்குதல்.

மாடுகள் மூன்று வயது வரையில் மேய்ச்சல் காடுகளிலேயே வளர்கின்றன என்று அறிந்தோமல்லவா? இம்மாடுகள் தம் விருப்பம்போல் ஓடி மேய்ந்து வளர்கின்றன. ஆகையால், இவைகள் கட்டுக்கு அடங்காமல் இருக்கும். இவற்றைப் பிடித்துக் கட்டிப் பழக்கினுல்தான் வேலைக்கு உதவும்.

காடுகளில் திரிந்து மேய்ந்த மாடுகளைப் பிடித்துப் பழக்குவது எளிதான காரியமல்ல. இதற்குத் திறமையும் அனுபவமும் வேண்டும். இதில் பழக்கப்பட்டவர்கள்தான் இக்காரியத்தைச் செய்ய முடியும். மாடுகளைப் பிடித்துப் பழக்கும் அனுபவமும் திறமையும் உள்ளவர்கள் இப் பண்ணையில் பலர் இருக்கிருர்கள்.

பழக்கவேண்டிய மாடுகளை முதலில் தொழுவத்திற்கு ஓட்டிக்கொண்டுவந்து அடைப்பார்கள். தொழுவம் நான்கு புறத்திலும் பாதுகாப்பு உள்ளதாய் இருக்கும். இல்லாவிட்டால் மாடுகள் ஓடிவிடும். தொழுவத்தில் அடைத்த மாட்டை எட்டி நின்று கயிறு போட்டுப் பிடிப்பார்கள். கயிறுபோடுவதற்கு நல்ல பழக்கம்வேண்டும். பழக்கம் உள்ளவர்கள்தான் கயிறு போடு

வார்கள். கயிறு போட்டுப் பிடித்ததும், மூகரை யில் கயிறு போட்டுக் கயிற்றுடன் விட்டுவிடு வார்கள். இதற்கே மாடுகள் அடங்காமல் எழும் பிக் குதிக்கும்; துள்ளிப் பாய்ந்துவிழும். பிறகு, கயிற்றைப் பிடித்துப் பலமுள்ள மூளைகளில் கட்டு வார்கள். மாடுகள் முரண்டிக் கயிற்றை அறுக்க முயலும். சிலவேளை கயிறு அறுபடுவதும் உண்டு; கயிறு அறுபடாமல் போனால் குதித்துப் பாய்ந்து கீழே விழுவதும் உண்டு. மாடுகளின் அடங்காத்தனத்தால் ஆபத்து விளைவதும் உண்டு. இவ்வளவு துடுக்குள்ள மாடுகள் சில நாட்களில் அடங்கிவிடும்.

பத்து நாட்கள் கழித்து இம் மாடுகளை மெது வாகத் தீனிப் பண்ணைக்குப் பிடித்துக்கொண்டு போவார்கள். தீனிப் பண்ணையில் தீனி தின்னப் பழக்குவார்கள். பருத்திக் கொட்டை, பிண் ணாக்கு முதலியவை இன்னதென்றே இவை களுக்குத் தெரியாது. இவ்வுணவுகளைத் தின்று இவைகளுக்குப் பழக்கமில்லை. ஆகையால் இவ் வுணவுகளைக் கொடுத்தால் தின்னமாட்டா. அத ஞல், தந்திரமாகத் தின்னப் பழக்குவார்கள்.

இம்மாடுகளுக்குக் காடுகளில் வேலாங்கா யைத் தின்று பழக்கம் உண்டல்லவா? அவ் வேலாங்காய்களைத் தீனி மேலே போடுவார்கள். மாடுகள் வேலாங்காய்களை மட்டும் தின்னும்.



தொழுவத்தில் காளைகள் காட்சி

அப்பொழுதுகொஞ்சம் பருத்திக்கொட்டை முதலிய தீனிகள் கலந்துபோகும். அக்கொட்டையின் சுவை தெரிந்ததும் மாடுகள் தீனி தின்னப் பழகிவிடும். இவ்வாறு சில நாட்களில் மாடுகள் நன்ருய்த் தீனி தின்னப் பழகிவிடுகின்றன.

ஓர் ஆள் இரண்டு மாடுகளைப் பிடித்துவந்து பழக்குவான். இவ்வாறு பலர் மாடுகளைப் பழக்குகிருர்கள். இவர்கள் நாள்தோறும் காலை வேளையில் மாடுகளைத் தண்ணீர் ஊற்றிக் கழுவிவிடுவார்கள். இதனுல், மாடுகளின் உடம்பு சுத்தமடையும்; மனிதரின் கைபடுவதால் கூச்சம் போகும். இன்னும் நன்ருய்க் கூச்சம் போகும்படி, மத்தியானம், மாலை வேளைகளில் மாடுகளின் உடம்பைக் கையால் தேய்ப்பார்கள். இப்பழக்கத்தால் ஒரு மாத காலத்தில் மாடுகள் நன்ருய்த்தீனி தின்னும்; கூச்சம் நீங்கிப் பழகிவிடும். பிறகு இரண்டு மாதங்களில் மாடுகள் கொழு கொழு என்று வளர்ந்து வளப்பத்துடன் இருக்கும்.

ஒவ்வொரு ஆண்டிலும் மாசி மாதத்தில், காளை மாடுகளைக் காட்டிலிருந்து பிடித்துவந்து பழக்கத் தொடங்குவார்கள். இவ்வேலை ஆனி மாதத்தில் முடிவடையும். அப்பொழுது 300 அல்லது 400 மாடுகள் வரையில் ஒரே கட்டுத்தரையில் கட்டியிருக்கும். அக்காட்சி பார்ப்பவர்க்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கும்.

## 8. கால்நடைகளின் சிறப்பு.

இவ்வாறு பழக்கிய மாடுகள் வேலைசெய்யத் தகுதி உடையதாகும். இந்நிலையில் இவைகளைத் தேவையானவர்களுக்கு விற்பார்கள். இம் மாடுகள் முக்கியமாகக் கண்ணபுரம் சந்தைக்கும், திருப்பூர்ச் சந்தைக்கும் கொண்டுபோகப்படு கின்றன. அவ்விடங்களில் பலர் கூடுவார்கள். தேவையுள்ளவர்கள் தேவையான மாடுகளை விலைகொடுத்து வாங்கிப்போவார்கள். மாடுகள், ஜதையாகத்தான் விற்கப்படுகின்றன. ஒரு ஜதை மாடுகள், ஒரே வயிற்றில் பிறந்த இரட்டைப் பிள்ளைகள் போல், ஒரே மாதிரியாயிருப்பது விந்தையாய் இருக்கும்.

பல ஊர்களில் பொருட் காட்சிச்சாலைகள் நடைபெறுவது உண்டல்லவா? அதுபோல, கால்நடைக் கண்காட்சிச் சாலைகள் நடைபெறுவது உண்டு. அவற்றில் பல ஊர்மாடுகள் வந்திருக்கும். சிறந்த மாடுகளுக்குக் கால்நடைக் கண் காட்சிச்சாலையார் பரிசுகள் கொடுப்பார்கள். இவ்வாறு நடந்த கால்நடைக் கண்காட்சிச்சாலைகளில், காங்கேயம் மாடுகளான இவைகளே, முக்கியப் பரிசுகளைப் பெற்றிருக்கின்றன. இதனால், இக்கால் நடைகள் சிறப்புள்ளவை என்று தெரிகிறதல்லவா?

## 9. பண்ணையின் சிறப்பு.

பட்டக்காரரின் கால்நடைப் பண்ணையைப் பார்ப்பதற்காகப் பலர் வந்து போகிறார்கள். அரசாங்க அதிகாரிகள், கால்நடை நிபுணர்கள், ஆராய்ச்சி செய்கிறவர்கள், மாணக்கர்கள் முதலிய பலர் வந்து வந்து பார்வையிட்டுக் களிப்படைகிறார்கள். இன்னும் வெளிநாடுகளிலிருந்து கூடப் பலர் வந்து கால்நடைப் பண்ணையைக் கண்டு களிக்கிறார்கள். இதனால் இப்பண்ணையின் மேன்மை விளங்குகிறதல்லவா?

இப்பண்ணையில் தயாரான மாடுகள், சிலோனில் இருக்கின்றன; மலேயா நாடுகளில் இருக்கின்றன; தென் அமெரிக்காவில் உள்ள பிரேசில் என்னும் நகரில் இருக்கின்றன; வட அமெரிக்காவில் உள்ள வாஷிங்டன் நகரத்தில் இருக்கின்றன; நியூஜிலந்து என்னும் நாட்டில் இருக்கின்றன; நமது இந்திய நாட்டில் பல இடங்களிலும் பரவியிருக்கின்றன. காங்கேயம் மாடுகளின் சிறப்பே இதற்குக் காரணம். இவ்வளவு மேன்மையான மாடுகளைத் தயார்செய்யும் பண்ணையின் சிறப்பைச் சொல்லவும் வேண்டுமோ?

கால் நடைகள், விவசாயத்திற்கு இன்றியமையாதவை. இவற்றைச் சிறந்த முறையில் உற்பத்திசெய்து வளர்க்கிறது, இப்பண்ணை. ஆகை

யால் இப்பண்ணை நமது நாட்டுக்குப் பெரிய தொண்டுசெய்கிறது என்று சொல்லலாம்.

சென்ற நாற்பது ஆண்டுகளில் இக்கால் நடைப் பண்ணையைப் பார்வையிட்டவர்கள் பல நூறு பேர்கள் ஆவார்கள். கவர்னர்கள், கால் நடை நிபுணர்கள் முதலியோர் தங்கள் கருத்துக் களைப் பார்வையாளர் புத்தகத்தில் எழுதியிருக் கிறார்கள்.

சென்னையில் கவர்னராய் இருந்த **ஸ்டான்லி பிரபு** என்பவர், **15-10-1931**-ல் எழுதியுள்ளது: "இன்று பட்டக்காரர் காண்பித்த கால்நடை களைப் போல், நான் எந்தத் தேசத்திலும் பார்த்தது கிடையாது. இவருடைய கால் நடைகள் எல்லாம் ஒன்றைப் போலவே இருக் கின்றன. அவைகள் மிகவும் சுத்தமாகவும், நேர்த் தியாகவும், அழகாகவும் இருக்கின்றன. இன் றைய தினம் பார்த்த காட்சிகளை நான் என்றும் மறக்க முடியாது."

இவ்வாறே இப்பண்ணையைப் பார்வையிட்ட ஒவ்வொருவரும் சிறப்பாக எழுதியிருக்கிறார்கள்.

## முடிவுரை.

பழயகோட்டை பட்டக்காரர் கால்நடைப் பண்ணை, இந்தியாவிலேயே சிறந்தது ஆகும். இதனால் தென்னிந்தியாவுக்கு ஒரு பெருமை. இப்

பண்ணையால் தமிழ்நாட்டு விவசாயத்திற்கு வேண்டிய மாடுகள் கிடைக்கின்றன.

இவ்வளவு சிறப்புள்ள பண்ணையை ஒவ்வொரு விவசாயியும் போய்ப் பார்க்கவேண்டும். பள்ளிக்கூட மாணவர்களும் விடுமுறைக் காலங்களில் போய்ப் பார்க்கவேண்டும். இதனுல், மாடு வளர்ப்பு முறைகளை அறியலாம்.

கால்நடைச் செல்வத்தைப் பெருக்கும் தொண்டினுல் பட்டக்காரர் பெரும்புகழ்பெற்றுள்ளார். பட்டக்காரர் தேடிய புகழ், தமிழ்நாட்டிற்குத் தேடித் தந்த சிறப்பு என்று சொல்லலாம். பட்டக்காரர் பரம்பரை வாழ்க! கால்நடைச் செல்வம் பெருகுக !!